Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

ஆயுஷ் மருத்துவத்தில் பத்து ஆண்டுகளில் 4,077 காப்புரிமை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது

சென்னை 17, அக்டோபர் 2026: 11வது ஆயுர்வேத தினக் கொண்டாட்டங்களின் போது வெளியிடப் பட்ட, இந்தியாவில் ஆயுஷ் தொடர்பான கண்டுபிடிப்புகள் குறித்த நிலை அறிக்கை 2014-2026-ன் படி, கடந்த பத்து ஆண்டு களில் இந்தியாவில் ஆயுஷ் தொடர்பான புத்தாக்கம், அறிவுசார் சொத்துரிமை நடவடிக் கைகள் குறிப் பிடத்தக்க விரிவாக்கத்தைக் கண் டுள்ளன. 2014-15-ம் நிதியாண் டுக்கும் 2025- 26-ம் நிதியாண்டுக்கும் இடை யில் 4,077 காப் புரிமை விண்ணப்பங் கள் தாக்கல் செய்யப் பட்டு, 711 காப்புரிமை கள் வழங்கப்பட் டுள்ளன.

2014-15-ம் நிதியாண் டில் 63 விண்ணப்பங் களாக இருந்த வருடாந் திர விண்ணப்பங்கள், 2025-26-ம் நிதியாண் டில் 590 விண்ணப்பங் களாக உயர்ந்துள்ளன. இது சுமார் 836.5 சதவிகித வளர்ச்சியைக் குறிக்கிறது.ஆயுஷ் துறைக் கான மத்திய இணை யமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் இது குறித்துக் கூறுகை யில், ஆயுஷ் தொடர் பான காப்புரிமை விண்ணப் பங்களில் ஏற்பட்டுள்ள கணிச மான வளர்ச்சியானது, ஆயுஷ் துறையில் ஆராய்ச்சி மீது அதிக ரித்து வரும் கவனத் தைப் பிரதிபலிக்கிறது என்றார்.